**செ. கு. எண்: 192** **நாள்: 01.12.2017**

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் இரங்கல் செய்தி – 1.12.2017

---

மறைந்த தினத்தந்தி நாளிதழின் அதிபர் டாக்டர் சிவந்தி ஆதித்தன் அவர்களின் மனைவியும், தினத்தந்தி குழுமத்தின் தலைவர் திரு. எஸ். பாலசுப்பிரமணியன் ஆதித்தன் அவர்களின் தாயாருமான திருமதி அமுதா அம்மாள் அவர்கள் உடல்நலக் குறைவால் இன்று (1.12.2017) காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த துயரமும், மனவேதனையும் அடைந்தேன்.

திருமதி அமுதா அம்மாள் அவர்கள், தனது கணவர் டாக்டர் சிவந்தி ஆதித்தன் அவர்களின் வளர்ச்சிக்கு, உற்ற துணையாகவும், பக்கபலமாகவும் இருந்தவர் என்ற பெருமைக்குரியவர்.

திருமதி அமுதா அம்மாள் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், தினத்தந்தி குழுமத்திற்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**